மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No.42/2015

2024–ம் ஆண்டு மார்ச் திங்கள் 01–ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4–ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | குமார்(Pw1) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

<u>நாள்.01.04.2024</u>

<u>வா.சா.1</u>

**<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு  விசாரணை தொடர்ச்சி:–</u>**

மண்டபம் காவல்நிலையத்தில் 09.09.2015ம் புகார் கொடுக்கப்பட்டு அதன் பெயரில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் அது வா.சா.ஆ. 11 ஆகும். அந்த முதல் தகவல் அறிக்கையில் உள்ள ரவி, பத்மாவதி, சரஸ்வதி, கோவிந்தராஜன், ராமகிருஷ்ணன், சண்முக பாலா, கோபால், மோகன்தாஸ் ஆகியோர்களில் பிரதிவாதிகள் யாரும் இல்லை என்றால் சரிதான் (சாட்சி புகாரில் பிரதிவாதிகள் பெயர்கள் இருப்பதாக சொல்கிறார்). இது சம்பந்தமாக போலீசார் நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்தில் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டதா என்றால் பதிவு செய்து விசாரணை நிலுவையில் உள்ளது. அந்தகுற்ற வழக்கு சம்பந்தமான ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் எனது தரப்பு ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 வீட்டு வரி ரசீதில் மொத்தம் 10 உள்ளது அதில் எனது இறந்து போன சகோதரர் நாகராஜன் பெயரில் 19.02.2000ல் இறந்து போன பிறகு பெறப்பட்டது என்றால் சரிதான் மூத்த சகோதரர் என்ற முறையில் பெறப்பட்டது மாற்றுவதற்கு மனு கொடுத்துள்ளோம். எனது தகப்பனார் 23.02.1978ல் கிருஷ்ணக்கோனாருக்கு எழுதிக்கொடுத்த அடமானப் பத்திரம் வா.சா.ஆ.17ல் சொத்தில் உள்ள வீட்டின் கதவு எண்.11/17 என உள்ளதா என்றால் சரிதான் பின்னிட்டு கதவு எண்.15/60 என உள்ளது. கதவு எண்.15/60 என காட்டுவதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் ரசீது உள்ளது. கதவு எண்.11/17 வீட்டிற்கு எனது தகப்பனார் 1968ல் கிரையம் வாங்கிய பின்பு ரசீது எதுவும் போடப்பட்டதா என்றால்

போடப்பட்டுள்ளது. எனது அப்பா பெயரில் உள்ள ரசீதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை வாரிசுகள் பெயரில் உள்ள ரசீதை தாக்கல் செய்துள்ளேன். நாகராஜன் பெயரில் உள்ள தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 ல் 10 தீர்வை ரசீதுகளில் கதவு எண்.15/55, 17/55, 17/66 ஆகிய மூன்று வீடுகளுக்கும் உரிய ரசீது என்றால் சரிதான் 17/55 என தற்போது மாற்றப்பட்டுள்ளது. மேற்படி கதவு எண்.15/55, 17/55, 17/66 ஆகிய மூன்று வீடுகளும் எந்த புல எண்ணில் உள்ளது என்றால் 240/2 ல் உள்ளது. மூன்று வீட்டுகளில் யார் குடியிருந்து வருகிறார்கள் என்றால் நாகராஜன் மனைவி அழகம்மாள், அவரது மக்கள், கருப்பையாவின் மனைவி தில்லையம்மாள், அவரது மக்கள், பர்வதவர்த்தினி, S.குமார், S.முனியசாமி, S.தில்லை, G.காளிஸ்வரி ஆகியோர் குடியிருந்து வருகிறோம். மேற்படி மூன்று வீடுகளிலும் சேதுக்கோனாரின் வாரிசுகள் யாரும் வசிக்கவில்லை மேற்படி மூன்று வீடுகளும் தாவா சொத்தில் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி வழக்குரையில் சொல்லியுள்ள வாதிகளில் ஒருவரும் மேற்படி கதவு எண் உள்ள வீட்டில் வசித்து வந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான் மீன்பிடி தொழில் நிமித்தம் காரணமாக இராமேஸ்வரத்தில் குடியிருந்து வருகிறோம். எனது மூத்த சகோதரி பர்வதவர்த்தினி பாதுகாப்பில் இருந்து வருகிறது. அவரது அனுபவத்திலும் உரிமையிலும் இருந்து வருகிறது. வா.சா.ஆ.23 கிரையம் கொடுத்த பிறகு அந்த சொத்தில் எந்த வீடும் இல்லை என்றால் சரியல்ல வீடு இருக்கிறது. 1 ம் பிரதிவாதி மண்டபத்தில் எந்த தெருவில், எந்த கதவு எண்ணில்வசித்து வருகிறார் என்றால் 15/60 மண்டபம் யாதவர் தெருவில் வசித்து வருகிறார். அந்த வீட்டிற்கு கிழக்கேயும், மேற்கேயும் யார் உள்ளார்கள் என்றால் கிழக்கு பக்கம் மாரியம்மன் கோவில் நிலமும் வட்டக்கிணறும், மேற்கு பக்கம்அவருக்கு சொந்தமான 1 வது இலக்க சொத்தும் உள்ளது. எனது சகோதரி பர்வதவர்த்தினி கதவு எண். 15/55 வீட்டில் குடியிருக்கிறாரா என்றால் குடியிருக்கிறார். SP, RDO, மாவட்ட ஆட்சியர் ஆகியோர்க்கு எல்லாம் தொடர்ந்து புகார் அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான் அந்த புகாரின் பெயரில் ஏதாவது விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள் நீதிமன்றம் மூலமாக பார்த்துக்கொள்ள கூறிவிட்டார்கள். அதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அனுப்பிய மனுக்கள் எல்லாம் பொய்யானவை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை

என்றால் சரியல்ல. நான் கதவு எண்.15/67, 17/55, 17/66 உள்ள வீடுகள் எனது பிராதில் சொத்து விபரத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல சொல்லியிருக்கிறேன். எனது சகோதரர் நாகராஜன் 19.02.2000 ல் இறந்துபோன போது எந்த கதவு எண்ணில் மண்டபத்தில் வசித்து வந்தார் என்றால் 15/60 கதவு எண் கொண்ட ஓட்டு வீட்டில் வசித்து வந்தார். நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணம், அடமான ஆவணம் மற்றும் ஒத்தி ஆவணங்களில் கதவு எண்.11/77 என்ற எண் கொண்ட ஒரே வீடு தான் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கதவு எண்.11/77 வீட்டிற்கு மேல்புறம் சுப்பையாக் கோனார், காளிமுத்து கோனார் வீடுகளின் சந்துப்பாதை உள்ளது என்றால் சரிதான். கீழ்ப்புறச் சொத்தாக வழக்குரையில் சொல்லியுள்ளதில் அப்படி எந்த ஒரு வீடும் இருந்ததாக நான் தாக்கல் செய்துள்ள அடமான, கிரைய, ஒத்தி ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல சொல்லப்பட்டுள்ளது. எனது தகப்பனார் 1968 ல் கிரையம் வாங்கிய சொத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட வீடுகள் இருந்ததா என்றால் இருந்தது கூரைவீடுகள் இருந்தது. அந்த வீடுகளின் கதவு எண் தெரியுமா என்றால் பழைய எண்.8/20 மற்றும் 11/77 ஆகும் பின்னிட்டு அதன் அடிப்படையில் மாற்றப்பட்டுள்ளது. அந்த மாதிரி வீடுகள் இருப்பதாக நாங்கள் 1ம் பிரதிவாதி ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த கிரைய ஆவணத்தில் சொல்லியிருக்கிருக்கிறீர்களா என்றால் சொல்லியுள்ளேன் கதவு எண்.15/60 ஓட்டு வீடு. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.23 ல் நாங்கள் ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த கிரையம் ஆவணம் என்றால் சரிதான் அதில் நான் மேற்படி சொன்னமாதிரி கதவு எண்.15/60 காட்டப்படுள்ளதா என்றால் கதவு எண் காட்டப்படவில்லை சொத்தில் கண்ட ஓட்டு வீடு அழிமானமாகி விட்டநிலையில் மீதமுள்ள காலி மனை நிலம் என்று சொல்லப்பட்டுள்ளது. எனது தகப்பனார் 22.08.1985 ல் கொடுத்த அடமான ஆவணம் வா.சா.ஆ.18 ஆவணத்திலும், நாங்கள் 19.09.1994 ல் வா.சா.ஆ.21ன் மூலம் பெற்ற அடமான made over பத்திரத்திலும் 1ம் பிரதிவாதி ராஜவேலுக்கு நாங்கள் 17.02.1999 தேதியில் வா.சா.ஆ.22ன் மூலம் கொடுத்த அடமான ஆவணத்திலும் தாவா சொத்திற்கு மேல்பக்கம் 1ம் பிரதிவாதி ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த சொத்தின் ஒரே வீட்டின் கதவு எண்.11/77 என்று குறிப்பிட்டு கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். சின்னகுட்டி அம்மாள், செல்லச்சாமி தேவரிடம் 22.08.1922 வா.சா.ஆ.13ன் மூலம் பெற்ற கிரைய

ஆவணத்திலும், வேலாயி அம்மாள் வா.சா.ஆ.14ன் மூலம் 15.05.1954ல் ஒரு கிருஷ்ணக்கோனாருக்கு எழுதிக்கொடுத்த ஒத்தி பத்திரத்திலும், 2வது இலக்க சொத்திற்கு கிழக்கு எல்லையாக இராமநாதபுரம் சமஸ்தான காலி நிலம், வட்டக்கிணறு குறிப்பிட்டு காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இரண்டு ஆவணங்களிலும் கண்ட இராமநாதபுரம் சமஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து 1947 சுதந்திரத்திற்கு பிறகு அரசுக்கு ஒப்படைக்கப்பட்டது என்றால் சரியல்ல அந்த சமஸ்தானத்திற்கு பாத்தியப்பட்ட சொத்து எங்கள் கைவசம் அனுபவத்திலும், உரிமையிலும் உள்ளது. எனது தகப்பனார், கிருஷ்ணக்கோனாருக்கு 23.08.1978ல் வா.சா.ஆ.17 எழுதிக்கொடுத்த ஒத்தி பத்திரத்திலும், எனது தகப்பனார் சுரேஷ்நம்புகுமாருக்கு 22.08.1985 எழுதிக்கொடுத்த வா.சாஆ.18 அடமான பத்திரத்திலும், சுரேஷ்நம்பு குமாருக்கு எங்களுக்கு 19.09.1994 தேதியில்எழுதிக்கொடுத்த வா.சா.ஆ.21 அடமான made over பத்திரத்திலும், நானும், எனது தாயார் மற்றும் சகோதரர்களும் சேர்ந்து ராஜவேலுக்கு எழுதிக்கொடுத்த 17.02.1999ல் எழுதிக்கொடுத்த அடமானப் பத்திரத்திலும் தாவா சொத்திற்கு கிழக்கு எல்லையாக கோவிந்தக்கோனார் வீடு கட்டி இருக்கும் இடம் என்று குறிப்பிட்டு எழுதிக்கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல கிழக்கு எல்கையாக மாரியம்மன் கோவில் இடமும், வட்டக்கிணறும் அதற்கும் கிழக்கே கோவிந்தக்கோனார் வீடும், நிலமும் என்று எழுதப்பட்டுள்ளது. 11.07.2001ல் ராஜவேலுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தில் வா.சா.ஆ.23ல் கிழக்கு எல்கையாக கோவிந்தக்கோனார் வீட்டிற்கும், நிலத்திற்கும் மேற்கு என்று உள்ளது என்றால் சாட்சி தவறு என்று சொல்கிறார். வா.சா.ஆ.23 கிரைய ஆவணத்தில் சொத்து விபரத்தில் கிழக்கு எல்கையை படித்து காட்டியதில் கோவிந்தக்கோனார் வீட்டிற்கு, நிலத்திற்கும் மேற்கு என்று உள்ளது. எனது அண்ணன் நாகராஜன் மனைவிக்கு சொத்து இருப்பதாக பாகப்பிரிவினை கோரி இராமநாதபுரம் டிமு கோர்ட்டில் OS.No.135/2004 என்ற வழக்கிலும், அந்த வழக்கில் ஏற்பட்ட வா.சா.ஆ.24 தீர்ப்பாணையிலும் தாவா சொத்திற்கு கிழக்கு எல்கையாக கோவிந்தக்கோனார் வீடும், நிலமும் அமைந்துள்ளதாக குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் கிரைய ஆவணத்தின் அடிப்படையில் போட்டுள்ளார்கள். என்னிடம் காட்டப்பட்ட அடமான, கிரைய, ஒத்தி ஆவணங்களில் விவரிக்கப்பட்ட நான்கு எல்லைகளுக்கும், நாங்கள்

ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த 2475 சதுர அடி பரப்பளவு கொண்ட ஒரே சொத்தை தவிர வேறு மனையிடம் இல்லை என்றால் சரியல்ல அடமான ஆவணத்தில் இரு இலக்க சொத்துக்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்குரையில் சொல்லப்பட்ட இரண்டாவது இலக்க சொத்தானது பூமியில் இல்லை என்றால் சரியல்ல 100 வருடமாக அடமானம், ஒத்தி, கிரையம் கொடுத்து அனுபவம் செய்து வருகிறோம். நாங்கள் ராஜவேலுக்கு 2475 சதுர அடி கிரையம் கொடுத்தபின்பு பூமியில் கூடுதலாக மனை அடி வைத்திருப்பதாக பிராதில் சொல்லப்பட்டிருந்தால் அது தவறு என்றால் சரியல்ல. ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த 2475 சதுர அடி தவிர கூடுதல் இடங்களை நாங்கள் எடுத்துக்கொள்ள தயாரா என்றால் அதை நீதிமன்றம் தான் சொல்லவேண்டும். 1922 முதல் எனது முன்னோர்களும், 1968 முதல் எனது தகப்பனாரும் 45 X 55 =2475 சதுர அடி பரப்பளவுள்ள ஒரு இடத்தை மட்டும் கிரையம் பெற்றுவிட்டு அதற்கு கிழக்கே 66 X 55 = 3630 பரப்புள்ள சதுர அடி சொத்தை கற்பனையாக உருவாக்கி கொண்டு அதை 2 வது இலக்க சொத்தாக பல்வேறு ஆவணங்களில் தவறாக குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரியல்ல கற்பனையாக இருந்தால் அரசாங்க அலுவலகத்தில் பதிவு செய்திருக்கமாட்டார்கள். 1ம் பிரதிவாதி அடமானம் வாங்கியிருக்கமாட்டார். வா.சா.ஆ.12 ன் கிரையம் மூலம் தான் கிரையம் பெறும் சொத்திற்கு கிழக்கே கோவிந்தக்கோனார் வீடு இருப்பதாக எனது தகப்பனாரே ஒத்துக்கொண்டு 22.07.1968 ல் லட்சுமி அம்மாளிமிடமிருந்து வா.சா.ஆ.12 ல் கிரையம் பெற்றிருப்பதால் 1970 க்கு பின் பிறந்த நாங்கள் கோவிந்தக்கோனார் வீடு கிழக்கில் இல்லை என்று மறுக்க முடியாது என்றால் சரியல்ல கிழக்கே 2 வது இலக்க சொத்துதான் காண்பிக்கப்பட்டுள்ளது அதற்கு கிழக்கே தான் கோவிந்தக்கோனார் வீடு உள்ளது. ராஜவேலுக்கு கிரையம் கொடுப்பதற்கு முன்பு நாங்களும், ராஜவேலும் எனது தகப்பனார் கிரையம் பெற்ற சொத்தை முழுவதும் அளந்து பார்த்தோமா என்றால் அளக்கவில்லை அளந்து பார்க்கவரவில்லை. நான் 2 வது இலக்க சொத்தாக சொல்லியுள்ள 3630 சதுர அடி 9 செண்ட் எந்த நான்கு எல்லைக்கு உட்பட்டது என்றால் மேற்கு 1 வது இலக்க சொத்து, தெற்கு கிழமேல் நெறிவு பாதை, வடக்கு இருளப்பக்கோனார் இடம், கிழக்கு மாரியம்மன்கோவிலும், வட்டக்கிணறும் அதற்கும் கிழக்கே அரசாங்க புறம்போக்கு நிலம். 1968 ல் எனது தகப்பனார் கிரையம் பெற்ற பிறகு வட்டாட்சியரிடம் மனு தாக்கல்

செய்து அந்த சொத்தில் எவ்வளவு சதுர அடி உள்ளது என்று அளந்து பார்த்தோமா என்றால் இல்லை 2013, 2015, 2018 களில் மனு கொடுத்துள்ளோம், தொழில் நிமித்தம் காரணமாக அளந்து பார்க்கவில்லை. ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த பின்பு 2 வது இலக்க சொத்து என்று இருந்ததை அந்த சொத்தினை வேலி அடைத்தோ, காம்பவுண்ட் சுவர் வைத்தோ பாதுகாப்பு செய்துள்ளோமா என்றால் அடைத்து வைத்திருந்தோம் ஆக்கிரமிப்பு செய்ததால் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது பொய் ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த 5 1/2 செண்ட் நிலத்திற்கும், கோவிந்தக்கோனார் வீட்டிற்கும் இடையில் 9 செண்ட் அளவில் எந்த சொத்தும் எக்காலத்திலும் இருந்ததில்லை என்றால் சரியல்ல. 1968 ல் எனது தகப்பனார் லட்சுமியிடம் கிரையம் பெற்றதாக கூறும் இடத்திற்கு அடுத்த கிழக்கில் கோவிந்தக்கோனார் அரசு புறம்போக்கு சர்வே எண்.140/2 ல் மாரியம்மன்கோவில் கருப்பணசுவாமி சந்நதிக்கு மேற்கில் வீடு கட்டி அவரது குடும்பத்துடன் குடியிருந்து வந்தார் என்றாலும், 23.12.2016 ல் தேதியில் அவர் இறந்து போனபிறகு, அந்த வீட்டில் 2, 3,7,8,9 பிரதிவாதிகள் குடியிருந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல., கோவிந்தக்கோனார் மண்டபம் அரசு ஊழியர் குடியிருப்பில் குடியிருந்து வந்தார். அவரது வாரிசுகளும் தற்போது வரை அங்கு தான் குடியிருந்து வருகிறார்கள். அரசு ஊழியர் இறந்துவிட்டால் அவரது குடும்பத்தார் அரசு வீட்டில் இருந்து 3 மாததிற்குள் காலி செய்ய வேண்டும் என்பது தெரியுமா என்றால் தெரியாது. 1964 ல் ஏற்பட்ட தனுஷ்கோடி புயல் இழப்பில் கோவிந்தக்கோனார் வீடும், மற்ற வீடுகளும் பாதிக்கப்பட்டு அதற்கு அரசு கொடுத்த இழப்பீடு கோவிந்தக்கோனாருக்கு கொடுக்கப்பட்டது என்றால் தெரியாது எங்கள் இடத்திற்கு கொடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படுவது நான் ராஜவேலுக்கு அடமானம் கொடுத்த வா.சா.ஆ.22 அடமான ஆவணத்தின் அசல் என்றால் சரிதான் அந்த அசல் ஆவணம் பி.வ.சா.ஆ.1 ஆகும். அந்த பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் நானும், எனது சகோதரர்களும், தாயாரும் கையொப்பம் இட்டுள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.23 ஆவணமானது நாங்கள் ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த கிரையம் ஆவணமாகும் அதன் அசல் என்னிடம் காட்டப்படுவது என்றால் சரிதான் அது பி.வா.சா.ஆ.2 ஆகும். அந்த பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தாயாரும், கருப்பையா, முனியசாமி, தில்லைநாயகம் மற்றும் நான்

ஆகியோர் கையொப்பம் செய்துள்ளோம் என்றால் சரிதான். அந்த பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது சகோதரி 1ம் வாதி பர்வதவர்த்தினி, 7ம் வாதி காளீஸ்வரியும் சாட்சியாக கையொப்பம் போட்டுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த கிரைய ஆவணத்தில் 2475 மொத்த சதுர அடியும் கிரையம் கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான் மொத்த சதுர அடி என்று சொல்லப்படவில்லை. நாங்களும், ராஜவேலும் கிரையம் கொடுப்பதற்கு முன்பு தாவா சொத்து என்று கூறப்படும் இடத்தை அளந்து பார்த்து 55 அடி நீளமும், 45 அடி அகலும், 2475 சதுர அடி பரப்பளவு ஸ்தலம் மட்டும் தான் ஒரே தாக்காக வா.சா.ஆ.23 (பி.வா.சா.ஆ.2) கிரைய ஆவணத்தில் கட்டுப்பட்ட நான்கு எல்கைக்குள் இருந்தது என்றால் தவறு இரண்டு இலக்க சொத்துக்கள் இருந்தது. ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த சொத்து சதுரமாக இருந்ததா, செவ்வகமாக இருந்ததா என்றால் சதுரமாக இருந்தது. தாவா சொத்தான 9 செண்ட் சதுரவடிவமாகவா இல்லை செவ்வக வடிவமாகவா உள்ளதா என்றால் செவ்வக வடிவமாக உள்ளது. தாவா 2வது இலக்க சொத்தாக நாங்கள் சொல்லும் 9 செண்டு சொத்தில் வீடோ, கட்டுமானமோ எதுவும் இல்லை வா.சா.ஆ.13 முதல் வா.சா.ஆ.18, வா.சா.ஆ.21, வா.சா.ஆ.22 கிரைய, அடமான, ஒத்தி ஆவணங்களில் சொத்து விபரங்களில் இல்லை, எல்லா ஆவணங்களிலும் காலி மனை என்றுதான் போடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குடிசைவீடு புயல், மழையால் அப்ப அப்ப பிரித்து கட்டுவோம். தாவா சொத்திற்கு சீர்திருத்தபிராதிற்கு முன்பு என்ன சர்வே எண் இருந்தது என்றால் 240/1 என இருந்தது. தற்போது சர்வே எண்.240/2 என உள்ளது. சர்வே எண்.240/2க்குரிய புலவரைபடத்தை வாங்கி பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். 1956 செட்டில்மெண்ட் படியும், A பதிவேட்டின் படியும் சர்வேஎண்.240/2க்கு மொத்த விஸ்தீரணம் 11 செண்டு என காட்டப்பட்டுள்ளது, அதேபோல் 1983 UDR திட்டத்தில் A பதிவேட்டிலும் சர்வே எண்.240/2ன் விஸ்தீரணம் 0.04.5 ஏர்ஸ் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். புலஎண்.240/2ல் கீழ்பகுதியில் யாதவர்தெருவில் மாரியம்மன்கோவிலும், அதன் புழக்கஸ்தலத்திலும் அதற்கும் மேற்கே உள்ள கோவிந்தகோனார் வீடும் உள்ள மொத்த பரப்பு 5 1/2 செண்டு என்றால் சரியல்ல. அதில் சர்வேஎண்.240/8ல் உள்ளது. புலஎண்.240/8 என்பது உட்பிரிவின்படி நாகுகோனார், இருளப்பக்கோனாரின் பட்டா நிலம் என்றால் சரியல்ல.

நாகுகோனார், இருளப்பக்கோனார் ஆகியோரின் வீடு எந்த சர்வே எண்ணில் உள்ளது என்றால் எங்கள் சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ளது. நாங்கள் ராஜவேலுக்கு கிரையம் கொடுத்த சொத்தை 16.08.2001ல் இராமநாதபுரம் மாவட்ட பதிவாளர், மண்டபம் வந்து ஸ்தல ஆய்வு செய்து, கிரைய பத்திரத்தில் கண்டுள்ள சொத்தை பொறுத்து சரிதான் என்று கிரைய ஆவணத்திலேயே(பி.வா.சா.ஆ.2) சான்று அளித்துள்ளார் அவரது கள ஆய்வில் வீடு எதுவும் இருப்பதாக சொல்லவில்லை என்றால் வீடு இருந்தது உண்மை பத்திர செலவையும், மவுண்டு செலவையும் மிச்சப்படுத்தவேண்டும் என்று சொல்லி மாவட்ட பதிவாளர் சொன்னதன்பேரில் இராஜவேலு அரசு ஊழியர் என்பதால் வீட்டை இடித்து உடைத்துவிட்டார். வா.சா.ஆ.22 அடமான ஆவணத்தில் இரண்டு சொத்துக்களுக்கும் சர்வேஎண்.124 என்று சொல்லியுள்ளோம் என்றால் சரிதான். திருத்தப்பத்திரம் எழுதுவதற்கு அவர் வரவில்லை. சர்வேஎண்.124 என்பது தவறா சரியா என்றால் தவறுதான். வா.சா.ஆ.23 கிரைய ஆவணத்தில் தாவா சொத்திற்கு பழைய புல எண்.240/1 மற்றும் புதிய புலஎண்.240/8, மேலும் திருத்தப்பிராதில் புலஎண்.240/2 என்று போட்டுள்ளது எல்லாமே தவறு என்றால் சரியல்ல. வா.சா.ஆ.23 கிரைய ஆவணத்தில் இதனடியில் கண்ட சொத்து விபரப்படி மனைநிலத்தில் எந்தவிதமான கட்டுமானங்களும் கிடையாது என்று நாங்கள் உறுதியாக சொல்கிறோம் என்று சொல்லியுள்ளோமா என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தாக்கல் செய்தது இராஜவேலு. கோவிந்தகோனார் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்வேண்டும் என்று எதிர்வழக்குரையில் 2, 7, 8, 9 பிரதிவாதிகள் கோரியும், அவரை தரப்பினராக சேர்க்காததால் இந்த வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. யாதவர் தெரு மாரியம்மன் கோவிலுக்கு மேற்கே கருப்பணசாமி சன்னதியும், அதை ஒட்டி 60 வயதிற்கு மேற்பட்ட ஸ்தல விருட்சமான வேப்பமரமும் உள்ளது என்றால் கருப்பணசாமி சன்னதி இல்லை. வேப்பமரம் உள்ளது. அது நாங்கள் வைத்தது. எனக்கு வயது தற்போது 51 ஆகிறது. 60 வயதிற்கு மேற்பட்ட மரத்தை நான் வைத்தேன் என்றால் எனது தகப்பனார் வைத்திருப்பார். ஆணையர் வந்து சொத்தினை பார்வையிட்டாரா என்றால் இந்த வழக்கில் ஆணையர் வரவில்லை. மாரியம்மன்கோவில் 135 வருடங்களுக்கு முன்பாக ராமுகோனார் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனது தகப்பனார் லெட்சுமியிடம் கிரையம்

வாங்கிய அசல் கிரைய பத்திரம் வைத்துள்ளோமா என்றால் அசல் ஆவணம் சிதலமடைந்து விட்டது. அது என்னிடம் தான் உள்ளது. அதனால் நகல் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படுவதுதான் 1968ல் எனது தகப்பனார் லெட்சுமி அம்மாளிடம் கிரையம் வாங்கிய ஆவணத்தின் அசல் என்றால் சரிதான். அது பி.வா.சா.ஆ.3 (வா.சா.ஆ.12) ஆகும். நாங்கள் தாவா சொத்து என்று சொல்லும் 9 செண்டு நிலம் யாதவர் தெருவில் இல்லை சர்வேஎண்.240/2ல் மொத்தம் உள்ள 11 செண்டில் 5 1/2 செண்டு மேற்புறம் உள்ள நிலத்தை ராஜவேலுக்கு கிரையம் கொடுத்திபிறகு கீழ்ப்புறத்தில் மீதமுள்ள உள்ள 5 1/2 செண்டு நிலத்தில் மாரியம்மன்கோவில், கருப்பணசாமி சன்னதி,, கோவிந்தகோனார் வீடும் மூன்றும் அமைந்துள்ளது அந்த கோவிந்தகோனார் வீட்டில்தான் வருட வருடம் முளைக்கொட்டு திருவிழாவிற்கு பாரி வளர்ப்பது அந்தவீட்டில் தான் செய்து வருகிறார்கள், நாங்கள் புறம்போக்கு நிலத்தை தவறான வழியில் அடையவேண்டும் என்பதற்காக பொய்யான வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பிரதிவாதிகளை அலைக்கழித்து உள்ளோம் என்றால் சரியல்ல.

**2, 3, 7, 8, 9 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

ஒம்/−S.இளையராஜா,
மாவட்ட உரிமையியல் மற்றும்
மற்றும் நீதித்துறை நடுவர்,
இராமேஸ்வரம்.